காலை முரசு
பக்கங்கள்:-21

**ஜனாதிபதி வேட்பாளர்கள் பங்கேற்கும்**

## பகிரங்க விவாதம் இன்று ஆரம்பம்!

“மார்ச் 12” இயக்கத்தின் ஏற்பாட்டில் சஜித் பிரேமதாஸ, நாமல் ராஜபக்ஷ, திலித் ஜய வீர, பா.அரியநேத்திரன் ஆகிய 4 ஜனா திபதி வேட்பாளர்கள் கலந்துகொள்ளும் பகிரங்க விவாதம் இன்று 06▶

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆனி 22 | சனிக்கிழமை | 07.09.2024 | அதிர்வு 036



# மக்களை முட்டாளாக்கும் அநுரவின் விஞ்ஞாபம்!

## இப்படி விளாசித் தள்ளிய ரணில்




“மாற்றத்தை ஏற்படுத்துவோம் என்று கூறி தேசிய மக்கள் சக்தி நாட்டை ஏமாற்றிய போதிலும், அவர்களின் 232 பக்க விஞ்ஞாபனத்தில் மாற்றம் தொடர்பாக எதுவும் குறிப்பிடப்படவில்லை. அது வெற்று மாற்றம். ஒட்டுமொத்தத்தில் அநுரவின் தேர்தல் விஞ்ஞாபம் மக்களை முட்டாளாக்குகின்றது.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். 06▶

## தமிழரசின் பொதுச்செயலரை வவுனியாவில் சந்தித்த பீரிஸ்



ஐக்கிய மக்கள் சக்தி / ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் பரப்புரை நடவடிக்கைகளுக்காக 06▶



தான் ஜனாதிபதி என்றதும் தனது அதிகாரம் கட்டுமட்டற்றது என்று எண்ணிச் செயற்பட்டார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அதனால் பல தவறான அணுகுமுறைகளைப் பின்பற்றினார்.

இப்போது, தற்போதைய ஜனாதிபதிப் பதவிக்காலத்தின் அந்தத்தில் நிற்கும் அவர், அதன் காரணமாகவோ என்னவோ மெல்லத் தமது பிடிவாதங்களில் இருந்து சற்று இறங்கி வருகின்றார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீண்ட காலமாக நிலவி வந்த வெற்றிடங்களுக்கு நான்கு புதிய நீதியரசர்களை நியமிக்கும் அவரது நடவடிக்கை அவர் தமது பிடிவாதத்தைக் கைவிட்டுக் கடைசி நேரத்திலாவது இறங்கி வந்தமைக்கு ஓர் உதாரணம்தான். 06▶





# அநுராதபுரத்தில் திருடிய மோ.சைக்கிளில் சென்று ஒன்பது இடங்களில் சங்கிலிகள் அறுத்த இளஞன்

(கே.வசந்தன்)

அநுராதபுரத்தில் ஒரு மோட்டர் சைக்கிளைத் திருடி, பல இடங்களுக்கும் திருடப்பட்ட அந்த மோட்டார் சைக்கிளில் சென்று பல பெண்களிடம் கத்தியை காட்டி சங்கிலி அறுத்த சம்பவம் தொடர்பில் அநுராதபுரத்தை சேர்ந்த ஒரு இளைஞனும், கொள்ளையடிக்கப்பட்ட தங்க நகைகளை கொள்வனவு செய்த வவுனியாவைச் சேர்ந்த இரு வர்த்தகர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என வவுனியாப் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா தோணிக்கல் பகுதியில் வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்ற பெண்ணிடம் மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து சென்ற இளைஞன் பெண்ணின் கழுத்தில் இருந்த மூன்று பவுண் தங்கச் சங்கிலியை அறுத்து சென்றுள்ளான். அதனை தொடர்ந்து பாதிக்கப்பட்ட பெண் வவுனியா பொலிஸிக் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த முறைப்பாடு தொடர்பில் வவுனியா தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஜெயக்கொடியின் வழிகாட்டலில் உப பொலிஸ் இன்ஸ்பெக்டர் அகமட் தலைமையில் பொலிஸ் சார்ஜன்ட்டுகளான திசாநாயக்கா (37348), திலீபன் (6146), பொலிஸ் கொன்தாபிள்களான உபாலி (10945), தயாளன் (9792), ரணில் (81010), கால்கே (9200) அடங்கிய பொலிஸ் குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது அநுராதபுரத்தை சேர்ந்த 31 வயது இளைஞன் ஒருவனை சந்தேகத்தில் கைது செய்திருந்தனர். அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் போது பல அதிர்ச்சிகரமான தகவல்கள் வெளியாகியுள்ளன. இதன்போது அந்த இளைஞனிடம் இருந்து அநுராதபுரத்தில் திருடப்பட்ட மோட்டர் சைக்கிள் ஒன்று மீட்கப்பட்டது. திருடப்பட்ட இந்த மோட்டர் சைக்கிளை பயன்படுத்தியே சங்கிலிகள் அறுக்கப்பட்டமை தெரிய வந்தது.

தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் போது கடந்த மூன்று மாதக் காலப்பகுதியில் அநுராதபுரம் பகுதியில் ஒரு மோட்டார் சைக்கிளுடன் ஒரு சங்கிலியும், மிஹிந்தலைப் பகுதியில் மூன்று சங்கிலிகளும், பரசண்கஸ்கல பகுதியில் ஒரு சங்கிலியும், பூனாவப் பகுதியில் ஒரு சங்கிலியும், பூவரசங்குளம் பகுதியில் ஒரு சங்கிலியும், உலுக்குளம் பகுதியில் ஒரு சங்கிலியும், தோணிக்கல் பகுதியில் ஒரு சங்கிலியும் என 9 இடங்களில் குறித்த இளைஞனால் சங்கிலிகள் அறுத்துச் செல்லப்பட்டமை தெரியவந்துள்ளது.

அத்துடன், அபகரிக்கப்பட்ட நகைகள் வவுனியா நகர் பகுதியில் உள்ள நகை விற்பனை நிலையங்கள் இரண்டில் உருக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டன. இரு நகைக்கடை உரிமையாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். திருட்டுச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்த சந்தேக நபருக்கு வேறு பல குற்றச் செயல்களில் ஈடுபட்டமை தொடர்பில் பல்வேறு நீதிமன்றங்களில் 6 பிடியாணைகள் காணப்படுகின்றன. அதில் நான்கு திறந்த பிடியாணையும், இரண்டு நாள் பிடியாணையும் உள்ளன எனவும் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட பிரதான சந்தேக நபர் மற்றும் கடை உரிமையாளர்கள் இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# இவ்வருடத்தில் இது வரையிலான சுங்க வருமானம் ரூ. 1 டிரில்லியன்

இந்த வருடத்தின் இதுவரையான காலத்தில் ஒரு டிரில்லியன் ரூபா சுங்க வருமானம் கிடைத்துள்ளதாகச் சுங்கப் பணிப்பாளர் நாயகம் சரத் நோனிஸ் தெரிவித்துள்ளார்.

எட்டு மாதத்திற்குள் ஒரு டிரில்லியன் ரூபா சுங்க வருமானம் கிடைக்கப்பெற்றது இலங்கை சுங்கத் திணைக்கள வரலாற்றில் முதல் தடவை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் மூலம் 2024 ஆம் ஆண்டிற்கான சர்வதேச நாணய நிதியத்தினால் நிர்ணயிக்கப்பட்ட 1.5 டிரில்லியன் ரூபா வருவாய் இலக்கை அடைந்துகொள்ள முடியும் என்றும் சுங்கப் பணிப்பாளர் நாயகம் சரத் நோனிஸ் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.






# தீர்வை முன்வைக்க விரும்பாத அநுரவை நம்பி தமிழ் மக்கள் எப்படி வாக்களிப்பது?

## சட்டத்தரணி சிறிகாந்தா கேள்வி

தமிழ் மக்களின் நீண்ட கால இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வினை தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்க முடியாத ஜனாதிபதி வேட்பாளர் அநுரவை தமிழ் மக்கள் எவ்வாறு நம்பி வாக்களிக்க முடியும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் மூத்த சட்டத்தரணியுமான நல்லதம்பி சிறிகாந்தா கேள்வி எழுப்பியுள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர "மாற்றத்திற்காக வாக்களியுங்கள்!" என்ற கோரிக்கை தொடர்பில் தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரித்து நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ் மக்களால் மறக்க முடியாத ஜே.வி.பியில் தற்போது தேசிய மக்கள் சக்தி என்ற பெயருடன் ஜனாதிபதி வேட்பாளர் அநுர களம் இறங்கி உள்ளார்.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களை சட்டரீதியாக பிரித்தவர்கள், தமிழ் மக்களிடம் மாற்றத்திற்காக வாக்களியுங்கள் எனக் கேட்கின்ற நிலையில் தமிழ் மக்கள் என்ன நம்பிக்கையில் வாக்களிக்க முடியும்?

ஊழலை ஒழிக்கப் போகிறோம், நாட்டை சூறையாடியவர்களுக்கு தண்டனை வழங்கப் போகிறோம் என அநுர கூறுவது நல்ல விடயம். அதை மட்டும் வைத்து தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று விடலாம் என நினைக்கக் கூடாது.

தமிழ் மக்களின் வாக்குகளை எதிர்பார்க்கும் நீங்கள் தமிழ் மக்களின் நீண்டகால இனப் பிரச்சினைக்கு தீர்வு வழங்குவது தொடர்பில் உங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில. எதுவும் குறிப்பிடவில்லை.

உங்களைப் போன்ற பல இடதுசாரி தலைவர்களை நான் கண்டிருக்கிறேன். அவர்களுடன் தற்போதுவரை நீண்ட உறவினை கொண்டிருந்தவன் என்ற ரீதியில் தமிழ் மக்களின் இனப் பிரச்சனைக்கான தீர்வினை உங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட மாட்டீர்கள் என்பதும் எனக்குத் தெரியும்.

ஆகையினால் தம்பி அநுரவிடம் நான் ஒன்றைக் கூறுகிறேன். அதாவது தேர்தலுக்கு இன்னும் சில நாள்கள் இருக்கின்ற நிலையில் நாளையோ நாளை மறு தினமும் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வினை உங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்குங்கள். அவ்வாறு உள்ளடக்கினால் உங்களுக்கான ஆதரவு தொடர்பில் நாங்கள் சிந்திப்போம்.

கடந்த காலங்களில் ஜனாதிபதி வேட்பாளராக களம் இறங்கிய சரத் பொன்சேகாவுக்கு தமிழ் மக்கள் வாக்களித்தமை பாரிய தவறு என்பதை தமிழ் மக்கள் உணர்ந்துள்ளனர்.

தேர்தல் காலங்களில் தமிழ் மக்களிடம் தேன் போன்ற வார்த்தைகளைக் கூறி வாக்குகளை கேட்கும் தென்னிலங்கை வேட்பாளர்கள் தொடர்பில் தமிழ் மக்கள் நம்பத் தயாராக இல்லை.

அதன் காரணமாக நீண்ட காலமாக தென்னிலங்கை வேட்பாளர்களால் ஏமாற்றப்பட்ட தமிழ் மக்கள் இம்முறை ஜனாதிபதி தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டிய சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டனர்.

எமது பொது வேட்பாளர் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் கோரிக்கைகளை தாங்கி தென் இலங்கைக்கு சர்வதேசத் திற்கும் ஒரு செய்தியை கூறவே களம் இறங்க் உள்ளார்.

ஆகவே தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வினை முன் வைக்காத எந்த ஒரு வேட்பாளரையும் தமிழ் மக்கள் ஆதரிக்க மாட்டார்கள் என்பதனை தென்னிலங்கையில் இருக்கின்ற வேட்பாளர்கள் அனைவரும் விளங்கி கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# கிங் கங்கையில் மாயமான மாணவன் சடலமாக மீட்பு!

கிங் கங்கையில் நீராடச் சென்று காணாமல்போன மாணவனின் சடலம் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் மீட்கப்பட்டது என்று நெலுவ பொலிஸார் தெரிவித்தனர்.

நெலுவ கடஹிங்கல பகுதியைச் சேர்ந்த ஜனிது சுரேந்திரா 19 வயதுடைய மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேற்படி மாணவன் ஹப்பிட்டிய, ஹெலபிட்டிய பிரதேசத்தில் மூன்று நண்பர்களுடன் ஜின் கங்கையில் நீராடச் சென்று காணாமல்போயிருந்தார்.

காணாமல்போன மாணவனைத் தேடி காலி கடற்படையினர் வந்து தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.




# உலக இயன்மருத்துவ தினத்தை முன்னிட்டு நேற்று சித்தங்கேணி முதல் மானிப்பாய் வரை நடைபவனி

உலக இயன்மருத்துவ தினத்தை முன்னிட்டு நடைபவனி நிகழ்வு ஒன்று இன்று சித்தங்கேணி சந்தியிலிருந்து மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை வளாகம் (GMH) வரை முன்னெடுத்துச் செல்லப்பட்டது.

மானிப்பாய் நரம்பியல் புனர்வாழ்வு சிகிச்சை நிலையம் (Neuro Rehabilitation centre) மற்றும் தனியார் தாதியர் பாடசாலை (Institute Of Medical science) ஏற்பாட்டில் இந்த நடைபவனி இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நிறுவனத்தின் தலைவரான பேராசிரியர் ராஜேந்திரா சுரேந்திரகுமரன், வைத்தியர் பேதுருப்பிள்ளை அமல் தினேஷ் கூஞ்ஞே, சங்கானை பிரதேச செயலாளரான திருமதி கவிதா உருத்திரகுமார் சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்கள்.

மேலும் சங்கானை இளைஞர் மன்ற உறுப்பினர்கள், சங்கானை பிரதேச செயலக ஊழியர்கள் மற்றும் கிரீன் ஞாபகார்த்த வைத்தியசாலை ஊழியர்கள், தனியார் தாதியர் பாடசாலையின் நிறுவன ஊழியர்கள் மற்றும் மாணவர்களும் இந்நடை பவனியில் கலந்து கொண்டார்கள்.

இந்நிகழ்வானது இயன்மருத்துவத்தின் முக்கியத்துவத்தையும் இயன்மருத்துவம் பற்றிய விழிப்புணர்வையும் மக்களுக்கு வழங்குவதற்காக முன்னெடுக்கப்பட்டது.

இம்முறை "முதுகு வலி மற்றும் அதற்கான இயன்மருத்துவ சிகிச்சை முறைகள்" எனும் கருப்பொருளில் உலக இயன்மருத்துவதினம் வருகின்ற 8ம் திகதி அனுஷ்டிக்கப்பட உள்ளது.

மானிப்பாய் நரம்பியல் புனர்வாழ்வு சிகிச்சை நிலையமானது 2014 ம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை சுமார் 10 வருட காலமாக சிறந்த முறையில் இயன்மருத்துவ மற்றும் புனர்வாழ்வு சிகிச்சைகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.














# விக்கி சொல்வதைத் தமிழர்களே கேட்பதில்லை! நான் அவரையெல்லாம் கண்டுகொள்வேனா?

## ஊடகவியலாளர்களிடம் அநுர இப்படிக் கேள்வி

"நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் சொல்வதைத் தமிழர்களே கேட்பதில்லை. நான் அவரையெல்லாம் கண்டு கொள்வேனா?"

– இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க கேள்வி எழுப்பினார்.

தேர்தல் பரப்புரைகளுக்காக வடக்கு மாகாணத்துக்கு வருகை தந்த அவர், ஊடகவியலாளர்களிடம் கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன், "அநுரகுமார ஜனாதிபதியாகத் தெரிவானால் நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான திட்டங்களோ அல்லது சர்வதேச ஒத்துழைப்பையோ அவரால் பெறமுடியாது. நாட்டின் பொருளாதாரத்தை கட்டி எழுப்ப வேண்டுமானால் அவர்கள் சீனாவின் உதவியை நாட வேண்டிய தேவை ஏற்பாடும். ஏற்கனவே நாடு சீனாவின் கடன்பொறிக்குகள் சிக்கியுள்ள நிலையில் நாட்டு மக்கள் அதனை விரும்ப மாட்டார்கள்" என்று விமர்சித்திருந்தார். இதற்குப் பதிலடியாகவே, "விக்னேஸ்வரன் கூறுவதைத் தமிழர்களே பொருட்படுத்துவதில்லை. நான் ஏன் பொருட்படுத்த வேண்டும்" என்று அநுர தெரிவித்துள்ளார்.

"இன்றைய உலகில் எந்தவொரு நாட்டையும் சார்ந்திருக்காமல் ஒன்றும் செய்ய முடியாது. அரசுகள் இன்னொரு அரசுகளுக்குத்தான் ஆதரவை வழங்குகின்றன. தனி நபருக்கு அல்ல. ஆதலால், இந்தியாவுடன் நெருக்கமாகப் பணியாற்ற வேண்டிய விடயங்களில் நான் இந்தியாவுடன் நெருக்கமாகவே பணியாற்றுவேன். சீனாவுடன் நெருக்கமாகப் பணியாற்ற வேண்டிய விடயங்களில் நான் சீனாவுடன் நெருக்கமாகவே பணியாற்றுவேன்." – என்றார்.

# போர்க்குற்றவாளிகளை நீதிமன்றம் தண்டிக்கும்!

## ஊடகர்களின் கேள்விக்கு அநுர விளக்கம்

"போரின்போது என்ன நடந்தது என்பதை கண்டறிந்து வெளிப்படுத்துவதில் நான் அப்போதும், இப்போதும் உறுதியாகவுள்ளேன். ஆனால், போர்க்குற்றவாளிகளுக்கான தண்டனைகள் நீதிமன்றங்களுடன் தொடர்புடைய விடயம்."

– இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தேர்தல் பரப்புரைகளுக்காக வடக்கு மாகாணத்துக்கு வருகை தந்த அவர், ஊடகவியலாளர்களிடம் கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அநுரகுமார அண்மையில் வழங்கிய செவ்வியொன்றில், "போரின்போது என்ன நடந்தது என்பதைக் கண்டறிய வேண்டும் என்பதே தமிழ் மக்களின் கோரிக்கையாக உள்ளது. அவர்கள் எவரையும் தண்டிக்கவேண்டும் என்று கோரவில்லை. எனவே, போரில் என்ன நடந்தது என்று வெளிப்படுத்தப்படும்" என்று தெரிவித்திருந்தார்.

அவரின் இந்தச் செவ்வியை மேற்கோள்காட்டி, "இறுதிப் போரின் போது போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்கு தண்டனை வழங்கும் நிலைப்பாட்டில் நீங்கள் இல்லையா?" என்று ஊடகவியலாளர்கள் வினவினார்கள்.

இதற்குப் பதிலளிக்கும்போதே, "இறுதிப்போரின்போது என்ன நடந்தது என்பதைக் கண்டறிவதும் வெளிப்படுத்துவதும் தான் என் வேலை. தண்டனை வழங்குவது நீதிமன்ற சுயாதீனத்துடன் தொடர்புடைய விடயம். நான் போர்க்குற்றவாளிகளைக் கண்டறிவேன். நீதிமன்றங்கள் அவர்களைத் தண்டிக்கும்." – என்று அநுரகுமார தெரிவித்துள்ளார்.

# ஊடகப் படுகொலைகள் பற்றி முழுமையான விசாரணைகள்

## ஜனாதிபதி வேட்பாளர் அநுர உறுதி

இலங்கையில் பல்வேறு ஊடகங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள், ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டமை என்பன தொடர்பில் முழுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்று தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார தெரிவித்தார்.

தேர்தல் பரப்புரைகளுக்காக வடக்கு மாகாணத்துக்கு வருகை தந்த அவர், ஊடகவியலாளர்களிடம் கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஊடகவியலாளர்கள் படுகொலைகள் மற்றும் ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள் குறித்து நீதி நிலைநாட்டப்படும் என்பதில் நான் மிக ஆழமான உறுதியுடன் உள்ளேன். இந்தக் குற்றங்கள் நிகழ்ந்து எத்தனை வருடங்கள் கடந்திருந்தாலும் நிச்சயமாக நீதியென்பது நிலைநாட்டப்பட்டே தீரும். அனைத்து வழக்குகள் தொடர்பிலும் நான் தீர்க்கமாக விசாரிப்பேன்." – என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தாம் ஜனாதிபதி என்பதனால், பொதுப் பதவி நிலைகளுக்கு நியமனம் செய்வதற்குத் தாம் பிரேரிக்கும் பெயர்களை அரசமைப்புக் கவுன்ஸில் கண்ணை மூடிக்கொண்டு அங்கீகரிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பவர் – எதிர்பார்த்தவர் – ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

பொலிஸ்மா அதிபர் நியமனத்திலும், உயர்நீதிமன்ற நீதியரசர்களை நியமிக்கும் விடயத்திலும் அவரது பரிந்துரைகளை அரசமைப்புக் கவுன்ஸில் தூக்கிக் கடாசிவிட்டது. அரசமைப்பு ஏற்பாடுகளின் படி தேவையான சமயங்களில் அத்தகைய நடவடிக்கையை எடுப்பதற்கு சுயாதீனமும் அதிகாரமும் கொண்ட கட்டமைப்புத்தான் அரசமைப்புக் கவுன்ஸில் என்ற அந்தச் சபை.

பொலிஸ்மா அதிபர் நியமனத்தில் தமது எழுந்தமானமான முடிவுகளுக்கு அரசமைப்புக் கவுன்ஸில் ஆதரவு தராது என்பதை உணர்ந்து, அரசமைப்புக் கவுன்ஸிலின் நிராகரிப்பை அங்கீகாரம் போல தவறாக அர்த்தப்படுத்தி, அந்த நியமனத்தை அரசமைப்புக் கவுன்ஸிலை மீறி ரணில் விக்கிரமசிங்க செய்தார். அதனால் அந்த பொலிஸ்மா அதிபர் பதவி உயர்நீதிமன்றத்தினால் இப்போது இடைநிறுத்தப்பட்டிருக்கிறது.

பதில் பொலிஸ்மா அதிபரை நியமிப்பதற்கு அரசமைப்பு கவுன்சிலின் அனுமதி, அங்கீகாரத்தைக் கோர விரும்பாத ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதனால் பதில் பொலிஸ்மா அதிபர் நியமனத்தை வழங்காமல் – அதற்கான முயற்சியை எடுக்காமல் – இழுத்தடிப்புச் செய்து வருகிறார்.

அதனால் நாட்டின் மிக முக்கிய ஜனநாயக நடவடிக்கையான ஜனாதிபதித் தேர்தல் நடக்கும் இந்தச் சமயத்தில் நாட்டின் காவல்துறைக்குப் பொறுப்பான பதவியில் பொலிஸ்மா அதிபரோ அல்லது பதில் பொலிஸ்மா அதிபரோ நியமிக்கப்படாத மோச நிலைமை நீடிக்கின்றது

பெரும்பாலும் புதிய ஜனாதிபதி பதவியேற்றுத்தான் பதில் பொலிஸ்மா அதிபரை நியமிக்க வேண்டுமோ என்னவோ....?

இதேபோன்ற இக்கட்டுத்தான் உயர் நீதிமன்ற நீதியரசர்கள் நியமனத்திலும் நடந்தது.

உயர்நீதிமன்ற நீதியரசர் பதவிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பரிந்துரைத்த பெயர்களை அரசமைப்பு கவுன்ஸில் நிராகரித்தமையை அடுத்து, நீதியரசர் பதவிகளுக்கு இனி யாரையும் பரிந்துரைப்பது இல்லை என்று உறுதி பூண்டார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

இதில் – உயர்நீதிமன்ற நீதியரசர் விடயத்தில் – ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நடவடிக்கையை ஒட்டி, உயர்நீதிமன்றம் தடை உத்தரவு ஒன்றைப் பிறப்பித்தது. உயர் நீதிமன்றத்திற்குப் புதிய நீதியரசர்களை நியமிப்பதற்கு ஜனாதிபதிக்கு அந்த நீதிமன்றம் தடை விதித்திருந்தது.

இதனால் கோபமடைந்த ரணில் விக்கிரமசிங்க நீதித்துறைக்கு நீதியரசர்களையே இனி நியமனம் செய்ய மாட்டேன் என்று அடம் பிடிக்கத் தொடங்கினார். இதனால் 19 இடங்களைக் கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் குழாமில் நான்கு வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் நீண்டகாலமாக நீடித்தன. புதிய ஜனாதிபதி வந்துதான் அந்த வெற்றிடங்கள் இனி நிரப்பப்படும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், கடந்த வாரத்தில் திடுதிப்பென மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் பதவிக்கு நான்கு பேரின் பெயர்களை பிரேரித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அவற்றை அரசமைப்பு கவுன்ஸில் ஆராய்ந்து அங்கீகரித்தது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமது அற்ப பிடிவாதத்தைக் கைவிட்டமையால் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு இருந்த ஒரு நெருக்கடியை தீர்க்கும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது.

எது, எப்படி என்றாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இப்போது கடைசி காலத்திலாவது இந்த நீதி,நியாய அணுகுமுறை தென்பட்டிருக்கின்றமை குறித்து மகிழ வேண்டியதுதான்.

## பகிரங்க விவாதம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

கட்டம் கட்டமாக நடைபெறவுள்ள இந்தப் பகிரங்க விவாதத்தில் பங்கேற்பதாக 38 வேட்பாளர்களில் 16 பேர் உறுதிப்படுத்தியிருக்கும் நிலையில், பிரதான வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்க மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் உள்ளடங்கலாக 22 பேர் தமது பங்கேற்பை இதுவரையில் உறுதிப்படுத்தவில்லை.

நாட்டில் தூய அரசியல் கலாசாரத்தைக் கட்டியெழுப்புவதை இலக்காகக்கொண்டு சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் பலர் ஒன்றிணைந்து உருவாக்கிய "மார்ச் 12" இயக்கமானது, அந்த இலக்கை அடைந்து கொள்வதை உறுதிப்படுத்தும் நோக்கில் பல்வேறுபட்ட பரீட்சார்த்த முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றது. அத்தகைய நடவடிக்கைகளில் ஒன்றாக கடந்த 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பதாக வேட்பாளர்களின் பங்கேற்புடனான பகிரங்க விவாதம் மார்ச் 12 இயக்கத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டது.

அதன் நீட்சியாக இம்முறையும் எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் வேட்பாளர்களின் பங்கேற்புடனான பகிரங்க விவாதத்தை நடத்துவதற்கும், அதனை அனைத்து ஊடகங்களிலும் ஒளிபரப்புவதற்கும் மார்ச் 12 இயக்கம் உத்தேசித்துள்ளது.

அதற்கமைய இம்முறை தேர்தலில் வேட்புமனுத்தாக்கல் செய்த 39 வேட்பாளர்களில் ஒருவர் உயிரிழந்த நிலையில், ஏனைய 38 வேட்பாளர்களுக்கும் விவாதத்தில் பங்கேற்பதற்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அவர்களில் சஜித் பிரேமதாஸ, நாமல் ராஜபக்ஷ, திலித் ஜயவீர, பா.அரியநேத்திரன், விஜயதாஸ ராஜபக்ஷ, நுவன் போபகே, சரத் மனமேந்திர, அனோஜ் த சில்வா, ஓஷல ஹேரத், பிரியந்த விக்ரமசிங்க, பாணி விஜேசிறிவர்தன, மயில்வாகனம் திலகராஜா, நாமல் ராஜபக்ஷ, கே.ஆர்.கிரிஷான், ரொஷான் ரணசிங்க மற்றும் கீர்த்தி விக்ரமரத்ன ஆகிய 16 வேட்பாளர்கள் இதுவரையில் தமது பங்கேற்பை உறுதிப்படுத்தியிருக்கின்றார்கள். இருப்பினும் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகிய பிரதான வேட்பாளர்கள் உள்ளடங்கலாக 22 வேட்பாளர்கள் இன்னமும் தமது பங்கேற்பை உறுதிப்படுத்தவில்லை.

இந்நிலையில் பங்கேற்பை உறுதிப்படுத்திய வேட்பாளர்களில் முதற்கட்டமாக ஐக்கிய மக்கள் சக்தியின் சஜித் பிரேமதாஸ, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாமல் ராஜபக்ஷ, சர்வஜன சக்தியின் திலித் ஜயவீர மற்றும் சுயேட்சையாகப் போட்டியிடும் தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் ஆகிய நால்வரின் பங்கேற்புடன் இன்றைய தினம் இந்தப் பகிரங்க விவாதம் ஆரம்பமாகின்றது.

இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.00 – 5.00 மணி வரை நடைபெறவிருக்கும் இந்த விவாதம் சகல தொலைக்காட்சி அலைவரிசைகளிலும், மார்ச் 12 இயக்கத்தின் உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்திலும் நேரலையாக ஒளிபரப்பு செய்யப்படவுள்ளது.

அதேவேளை விஜயதாஸ ராஜபக்ஷ, நுவன் போபகே, சரத் மனமேந்திர, அனோஜ் த சில்வா, ஓஷல ஹேரத் மற்றும் பிரியந்த விக்ரமசிங்க ஆகிய 6 வேட்பாளர்களின் பங்கேற்புடனான விவாதம் நாளை ஞாயிற்றுக்கிழமையும், பாணி விஜேசிறிவர்தன, மயில்வாகனம் திலகராஜா, நாமல் ராஜபக்ஷ, கே.ஆர். கிரிஷான், ரொஷான் ரணசிங்க மற்றும் கீர்த்தி விக்கிரமரத்ன ஆகிய 6 வேட்பாளர்கள் கலந்துகொள்ளும் விவாதம் நாளைமறுதினம் திங்கட்கிழமையும் நடைபெறவுள்ளது.

## தமிழரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நேற்று வெள்ளிக்கிழமை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் மருத்துவர் ப. சத்தியலிங்கத்தை வவுனியாவில் சந்தித்து உரையாடினார்.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் அரசமைப்பு விவகாரம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

## மக்களை முட்டாளாக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

டி.எஸ். சேனநாயக்கவும் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கவும் இணைந்து நாட்டின் சுதந்திரத்துக்காக ஸ்தாபித்த ஐக்கிய தேசியக் கட்சி, நாட்டின் பொருளாதார சுதந்திரத்துக்காக அனைவரையும் ஒன்றிணைத்து மீண்டும் பங்காற்ற ஆரம்பித்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டுக்காக ஒன்றுபடுகையில் கோஷமிடும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்று தெரிவித்த ஜனாதிபதி, ஜீ.எல். பீரிஸ், நாலக கொடஹேவா மற்றும் டலஸ் அழகப்பெரும போன்றோருக்கு முன்னுரிமை அளிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியில் ஐக்கிய தேசியக் கட்சி கொள்கை எதுவும் இல்லை என்றும் குறிப்பிட்டார்.

மொரவக்க பிரதேசத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற "இயலும் ஸ்ரீலங்கா" வெற்றிப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தப் பேரணியில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டதுடன் ஜனாதிபதிக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

"அரசு தற்போது முன்னெடுக்கும் ஏற்றுமதி பொருளாதாரத்தை தாமும் முன்னெடுப்பதாக அநுரகுமார திஸாநாயக்க தெரிவிக்கையில் இறக்குமதி பொருளாதாரத்தை மேற்கொள்ள வேண்டும் எனச் சுனில் ஹந்துன்நெத்தி கூறுகின்றார். இந்த முரண்பாடான கருத்துக்களைதேசியமக்கள்சக்திநாட்டுக்குவிளக்கமளிக்க வேண்டும்." – என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"இன்று எனக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் முக்கியமான நாள். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்கள் 07

## மக்களை முட்டாளாக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சுதந்திரத்துக்காக ஒன்றுபட்டனர். பின்னர் பிரிந்து செயற்பட்டனர். அதேபோல் நாட்டின் பொருளாதாரத்துக்கு ஆபத்து வந்திருக்கும் வேளையில் நாம் ஒன்றுபட்டிருக்கின்றோம்.

இன்று சிலர் கட்சியை விட்டு ஓடிவிட்டு நாங்கள் ஒன்றிணைந்திருப்பதைப்பற்றிபேசுகிறார்கள்.நாடுபொருளாதாரநெருக்கடியை எதிர்கொள்ளும் வேளையில் நாட்டை மீட்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கையாகும். ஐக்கிய மக்கள் சக்திக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் எந்தத் தொடர்பும் இல்லை. ஜீ.எல். பீரிஸ், நாலக கொடஹேவா, டலஸ் அலகப்பெரும போன்றவர்களைப் பலப்படுத்தும் கட்சியினரை எவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியினர் என்று சொல்லிக்கொள்ள முடியும்?

ஐக்கிய தேசியக் கட்சி என்ற வகையில் கட்சியின் முன்னாள் தலைவர்களும் நாமும் உண்மையை மட்டுமே மக்களுக்குச் சொல்வோம். கடந்த தேர்தல் காலத்திலும் நான் இந்த நாடு வங்குரோத்து அடையப்போகிறது என்ற உண்மையை முன்கூட்டியே மக்களுக்குச் சொன்னேன்.

நாடு நெருக்கடியிலிருந்து மீள 60 கோடி அமெரிக்க டொலர்கள் தேவைப்படும் என்பதையும் சொன்னேன். எம்மிடம் திட்டம் ஒன்றுமில்லை என்று எதிர்த்தரப்பினர் அன்று விமர்ச்சித்தனர். அதனால் நாம் தோற்றுப்போனோம்.

அப்போது சிலர் உண்மை கூறித் தோற்பதற்குப் பதிலாக பொய் சொல்லி வென்றிருக்கலாம் என்று கூறினார்கள். ஆனால், எமது கொள்கையில் மாற்றமில்லை. எவ்வாறாயினும் நாம் அன்று கூறியவாறு நாட்டின் எதிர்கால பயணத்துக்கு தேவையான நிதியை தேடிக்கொண்டிருக்கின்றோம். ஐ.எம்.எப். மற்றும் கடன் வழங்கிய 18 நாடுகளின் உதவியுடன் 16 பில்லியன் அமெரிக்க டொலர்களைத் தேடிக்கொண்டுள்ளோம்.

தற்போது ஐ.எம்.எப். எமக்கு சில நிபந்தனைகளை விதித்துள்ளது. அதனால் மக்களுக்குச் சேவை செய்வதற்கு வருமானத்தை அதிகரிக்க வேண்டியிருந்தது. அதற்காகவே விருப்பம் இல்லாமலேனும் வற் வரியை அதிகரித்தோம். அதனைச் செய்ததாலேயே நாட்டில் பணவீக்கம் குறைந்து ரூபாவின் பெறுமதி அதிகரித்து. அதன் பலனாக பொருளாதாரம் நிலைதன்மையை அடைந்தது. இன்று முன்னோக்கிச் செல்கின்றோம்.

அதேபோல் மக்களுக்கு நிவாரணங்களை வழங்கினோம். நிவாரணம் பெறும் பயனாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவுள்ளோம். சமுர்த்தி போன்று மூன்று மடங்கு நிவாரணம் இன்று கிடைக்கின்றது. பின்னர் உறுமய திட்டத்தில் காணி உறுதியை வழங்குகின்றோம். அரச ஊழியர்களுக்குச் சம்பளம், வாழ்வாதாரக் கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டது. அடுத்த வருடத்துக்கான சம்பள அதிகரிப்பும் உறுதி செய்யப்பட்டுள்ளது. உரத் தட்டுப்பாட்டையும் போக்கினோம்.

அதனால் பல பொருட்களின் விலைகள் குறைந்தன. சில பொருட்களின் விலைகள் 10 சதவீதத்தால் குறைந்துள்ளதோடு சில பொருட்களின் விலகள் 40 சதவீதம் வரையில் குறைந்தன. எவ்வாறாயினும் இன்னும் ஐந்து வருடங்களுக்கு சரியான பாதையில் பொருளாதாரத்தை கொண்டுச் செல்வதற்கான திட்டத்தை முன்மொழிந்திருக்கின்றோம்.

ஐந்து அம்சங்களின் கீழ் அந்த திட்டத்தைச் செயற்படுத்த விருக்கின்றோம். இன்று ரூபாவின் பெறுமதி குறைந்துள்ளது. ஆனால், அது போதுமானதல்ல. இருப்பினும் நாட்டில் நிலைத்தன்மை உருவாகியுள்ளது. வாழ்வாதாரச் செலவும் குறைந்துள்ளது.

இன்னும் பல நிவாரணம் மக்களுக்கு கிடைக்கும். எதிர்க்கட்சிகள் வரி குறைப்பு பற்றி பேசுகின்றனர். அதே வழியில் சென்றதாலேயே கோட்டாபய ஆட்சி சரிந்தது. நாம் செல்லும் வேகம் குறைவாக இருக்கலாம். ஆனால், எமது பயணம் வலுவான பயணமாக இருக்கும்.

இன்று கஷ்டங்களுக்கு மத்தியிலாவது வாழக்கூடிய நிலைமை உள்ளது. அதேபோல் இந்த நாட்டு பெண்களின் உரிமைகளை ஏற்றுக்கொண்டிருக்கின்றோம். பெண்களுக்குத் தனியானதொரு பகுதியைத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருக்கின்றோம். பெண்களை வலுவூட்டும் சட்டத்தையும் நிறைவேற்றியுள்ளோம். அதனால் பெண்களின் உரிமைகள் எல்லா இடங்களிலும் பாதுகாக்கப்படும்.

பெண்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுப்பதற்கான திட்டங்களையும் குறிப்பிட்டுள்ளோம். சுய தொழில் செய்வோருக்கும் நிதி நிவாரணங்களை வழங்குவோம். தனியார் துறையிலும் அரச துறையிலும் பயிற்சி பெறுவதற்கும் நிதி உதவிகளை வழங்குவோம்.

சஜித்துக்கோ அநுரவுக்கோ இந்தத் திட்டங்கள் இல்லை. தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் திட்டங்கள் எம்மிடம் உள்ளன. விவசாய நவீன மயப்படுத்தல் முயற்சிகளை ஆரம்பிக்கவுள்ளோம். உலக உணவுத் தேவையை இலக்கு வைத்து உணவு உற்பத்தியை மேற்கொள்ள வழிகாட்டுவோம்.

தேயிலை வளர்ப்பு, தேயிலை மீள் வளர்ப்புக்கான நிதி உதவிகளும் வழங்குவோம். கருவா, கோப்பி போன்ற உற்பத்திக்கும் புதிய ஏற்றுமதிக்கான பொருட்களை விளைவிக்கும் அனைவருக்கும் சலுகை வழங்குவோம். அடுத்த வருடத்திலிருந்து நிவாரணங்கள் கிடைக்கும். மேலும் சுற்றுலா பயணிகள் வருகையை அதிகரிக்க பலப்படுத்தவும் அர்ப்பணிக்கவும் வேண்டும்.

டிஜிட்டல் பொருளாதாரம், முதலீட்டு வலயங்கள் என்பவற்றை உருவாக்குவோம். அதனால் வெளிநாட்டு முதலீடுகளை நாட்டுக்குள் கொண்டு வருவோம். இவ்வாறிருக்க என்று அநுரகுமார திஸாநாயக்கவும் ஏற்றுமதி பொருளாதாரம் பற்றிப் பேசுகின்றார். எமது கொள்கையை அவரும் பின்பற்றுவதை வரவேற்கின்றோம்.

ஆனால், மறுமுனையில் நான் பொருளாதார பரிமாற்றச் சட்டமூலத்தை சமர்ப்பிக்கும்போது சுனில் ஹந்துன்நெத்தி போன்றவர்கள் அதற்கு எதிராக வழக்குத் தொடுத்தனர். அதனால் அநுரகுமார சொல்லும் விடயங்களுக்கு முரணாணதாகவே ஹந்துன்நெத்தியின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. அதேபோல் உள்நாட்டு வெளிநாட்டு முதலீட்டாளர்களை புறக்கணிக்கும் வகையிலான கொள்கைகளை குறிப்பிட்டுள்ளனர். அது பற்றி நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். இன்று திசைக்காட்டி எந்தப் பக்கம் சுற்றுகிறது என்பது அவர்களுக்கு புரியவில்லை.

இன்று நாட்டில் மாற்றம் செய்யப் போவதாகக் கூறுகின்றார்கள். ஆனால், அதற்கான எந்த விடயங்களும் அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இல்லை. ஆனால், நாம் பல்வேறு மாற்றங்களைச் செயலில் காட்டியிருக்கின்றோம். ஜனசபா, இளையோர் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் உள்ளிட்ட பல மாற்றங்களைச் செய்தோம். ஊழல் எதிர்ப்புக்கான தெற்காசியாவின் வலுவான சட்டத்தை நிறைவேற்றியிருக்கின்றோம்.

அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது நாம் செய்து காட்டுகின்றோம். எனவே, அநுரகுமார திஸாநாயக்க எமது கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டும். இயலும் ஸ்ரீலங்கா நாட்டின் முன்னேற்றத்துக்கான திட்டம். நெருக்கடியின்போது முடியாது என்று ஓடியவர்களோ இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. எனவே, சிலிண்டர் சின்னத்துக்கு வாக்களியுங்கள்." – என்றார்.

# நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் கோயிலில் ஆவணி சதுர்த்திப் பெருவிழா



நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் கோயில் ஆவணி சதுர்த்திப் பெருவிழா இன்று சனிக்கிழமை காலை 6.15 மணிக்கு நடைபெறவுள்ளது.

காலை நிகழ்வாக 1008 சங்காபிஷேகம், பஞ்சமுகப் பிள்ளையார் அர்ச்சனை மற்றும் தீபாபரதனைகள் நடைபெறவுள்ளன. மதியம் 12 மணிக்கு மகேஸ்வர பூசை நடைபெறும்.

மாலை நிகழ்வுகள் 5 மணியளவில் மூலஸ்தான பூஜையுடன் ஆரம்பமாகி மாலை 6.30 மணியளவில் வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து சுவாமி உள்வீதி, வெளிவீதி உலா வருவார்.

இதேவேளை, சைவசமய அறிவுசார் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழும் பரிசில்களும் வழங்கும் நிகழ்வு மாலை 5.30 மணிக்கு ஆலய உள்வீதி மண்டபத்தில் நடைபெறும்.

அறநெறிப் பாடசாலை மாணவர்களின் வில்லிசை நிகழ்வும் நடைபெறவுள்ளது. இரவு 8.30 மணிக்கு இராப் போசனம் வழங்கப்படும்.



# தபால் மூல வாக்களிப்பு எண்பது வீதம் நிறைவு

ஜனாதிபதி தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு, 80 சதவீதம் நிறைவடைந்துள்ளதாக பிரதி தபால் மா அதிபர் ராஜித கே.ரணசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு, மூன்றாவது நாளாக நேற்று இடம்பெற்றது.

நேற்றைய தினம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம், சிரேஷ்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம், உதவி பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம், பொலிஸ் நிலையங்கள், விசேட அதிரடிப்படை முகாம்கள் மற்றும் விசேட பொலிஸ் பிரிவுகள் என்பன வற்றிலும் தபால் மூல வாக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

தபால் மூல வாக்குகளை செலுத்த முடியாதவர்களுக்கு எதிர்வரும் 11ஆம் மற்றும் 12 ஆம் திகதிகள் மேலதிக தினங்களாக ஒதுக்கப்பட்டுள்ளன.

அவ்வாறு 11ஆம் மற்றும் 12 ஆம் திகதிகளில் வாக்களிப்பவர்கள் தாங்கள் கடமையாற்றும் மாவட்டங்களின் மாவட்ட செயலகங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள விசேட வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்க வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.



# மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு 4 புதிய நீதியரசர்கள் நியமனம்

அரசமைப்பின் 107ஆவது சரத்தின் பிரகாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கான 4 புதிய நீதியரசர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.



மேல் நீதிமன்ற நீதிபதிகளான கே.எம். ஜி.எச்.குலதுங்க, டி.தொடவத்த மற்றும் ஆர்.ஏ.ரணராஜா ஆகியோர் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கான புதிய நீதியரசர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், முன்னாள் சிரேஷ்ட பிரதி மன்றாடியர் நாயகம் எம்.சி. எல்.பி.கோபல்லவவும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும், உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் ஊவா மாகாண ஆளுநராக அனுர விதானகமகே நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நேற்று இந்த நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# விரைவில் பொதுத் தேர்தல்

இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தலின் வாக்களிப்புக்கு இன்னும் சரியாக இரண்டே இரண்டு வாரங்கள்தான் உள்ள. இன்னமும் 12 நாள்கள்தான் பிரசாரக் காலம்.

களத்தில் 39 வேட்பாளர்கள் இருந்தாலும், போட்டி என்னவோ மூன்று பேர் மத்தியில்தான்.

அதிலும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரை அவர் அதிகாரத்தில் - பதவியில் - இருக்கும் நிறைவேற்றதிகார ஜனாதிபதி என்பதனாலும், அரசுக் கட்டமைப்பும் அமைச்சர்களும் அவரது பிரசாரத்துக்குப் பக்கபலமாக இருக்கின்றமையினாலும் தேர்தல் பிரச்சாரத்தில் அவர் தரப்பு ஆரவாரம் - எடுப்பு - காட்டுகின்றது.

ஆயினும் கூட, அத்தரப்பில் ஒரு தொய்வு நிலை - தோல்வி பற்றிய பீதி நிலை - காணப்படுவது கண்கூடு.

அவருக்கு மிக நெருக்கமானவர்களே மேடைகளில் 'ரணில் தோற்றால் நாட்டுக்குப் பேரழிவு, மீண்டும் வரிசை யுகம் ஏற்படும், இரண்டு ஆண்டுகளில் மீண்டும் ஜனாதிபதி தேர்தல் நடக்கும்' என்றெல்லாம் பேசத் தொடங்கி விட்டனர். இந்த உரைகள் எல்லாம் ரணில் விக்கிரமசிங்க கட்டாயம் வென்றாக வேண்டும் என்ற விடயத்தை வலியுறுத்துவதற்காக முன்வைக்கப்பட்ட வாதங்கள் - அம்சங்கள் - என்றாலும், அக்கூற்றுகளுக்கு இடையில் தோல்வி பயத்தின் சந்தேக ரேகை ஒடுவது வெளிப்படையானது.

மற்றைய இரு வேட்பாளர்களான எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுர குமார திஸநாயக்கவும் இம்முறை வெற்றி தங்களுக்கே என்ற முழு உறுதிப்பாட்டுடன் தேர்தல் களத்தில் சுறுசுறுப்பாகவும் முழு நம்பிக்கையுடனும் சமராடி வருகின்றார்கள்.

இந்த இருவரும் தாங்கள் வென்றால் உடனடியாக நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்று அறிவித்திருக்கின்றார்கள்.

வரும் 22 ஆம் திகதி காலையில் நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்று தேசிய மக்கள் சக்தி இப்போது வெளிப்படையாக அறிவித்து வருகின்றது.

அப்படிப் பார்த்தால் கடந்த மூன்றாம் திகதி நடைபெற்றதுதான் தற்போதைய நாடாளுமன்றத்தின் கடைசி அமர்வாக இருக்கும். நாடாளுமன்றம் தற்போது ஒக்டோபர் எட்டாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது.

ஜனாதிபதி தேர்தல் வரும் 21ஆம் திகதி நடைபெறுகிறது. அடுத்த நாள் வாக்கு எண்ணிக்கை முடிந்து, உத்தியோகபூர்வ அறிவித்தல் வந்த பின்னர் இந்தநாடாளுமன்றம்நீடிக்கஅனுமதிக்கப்பட்டால்தான் வரும் ஒக்டோபர் எட்டாம் திகதி அடுத்த அமர்வுக்கு அது கூட முடியும்.

சஜித்தோ அநுராவோ ஜனாதிபதியாகத் தெரிவானதும் நாடாளுமன்றத்தைக் கலைத்தாலும் நாடாளுமன்றத் தேர்தல் வரை ஒரு காபந்து அரசாங்கம் தொடர ஏற்பாடு செய்துதானாக வேண்டும்.

சஜித் ஜனாதிபதியாகத் தெரிவானால் தற்போதைய நாடாளுமன்றத்தில் அவரது கட்சிக்கு ஐம்பதுக்கும் மேற்பட்ட எம்.பிக்கள் இருக்கின்றமையினால் அவர்களை அமைச்சர்களாக செயல்பட வைத்து ஒரு காபந்து அரசை பொதுத்தேர்தல் வரை அவரால் நியமித்துக் கையாள முடியும்.

ஆனால் அநுர குமார திஸநாயக்க ஜனாதிபதியானால், அவரது கட்சிக்கு தற்போது நாடாளுமன்றத்தில் ஆக மூன்றே மூன்று எம்.பிக்களே இருப்பதால் அவர்களையும் தம்மையும் கொண்ட - நான்கு அமைச்சர்கள் உள்ள - காபந்து அரசைத்தான் அவர் நியமிக்க வேண்டியிருக்கும்.

இவையெல்லாம் ஜனாதிபதித் தேர்தல் முடிவு வெளியான பின்னர் ஏற்படப் போகும் அரசியல் நெருக்கடிகள் பற்றிய ஒரு குத்துமதிப்பான கருத்துகள்தான்.



# பா.ஜ.கவில் இணைந்தார் கிரிக்கெட் வீரர் ஜடேஜா

இந்திய கிரிக்கெட் வீரர் ரவீந்திர ஜடேஜா பாரதிய ஜனதா கட்சியில் இணைந்துள்ளார்.

ரவீந்திர ஜடேஜாவின் மனைவி குஜராத் ஜாம்நகர் தொகுதி பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினராக உள்ளார்.

பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினரும், ரவீந்திர ஜடேஜாவின் மனைவியுமான ரிவாபா ஜடேஜா பா.ஜ.க. உறுப்பினர் அட்டையில் தானும், தனது கணவரும் இருக்கும் புகைப்படங்களை எக்ஸ் தளத்தில் பகிர்ந்துள்ளார்.

உறுப்பினர் சேர்க்கை இயக்கத்தைச் சமீபத்தில் பா.ஜ.க. தேசிய தலைவர் ஜேபி நட்டா ஆரம்பித்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, கடந்த 02 ஆம் திகதி புது டில்லியில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை உறுப்பினராகப் புதுப்பித்துச் சேர்த்தார்.

இதனையடுத்து நாடு முழுவதும் பாஜக உறுப்பினர் சேர்க்கை தீவிரமடைந்துள்ளது.

முன்னதாகக் குஜராத் ஜாம்நகர் பகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ரிவாபா அந்தக் கட்சியில் சட்டமன்ற உறுப்பினரும் இருந்து வரும் வேளையில் தற்போது ஜடேஜாவும் பா.ஜ.க. கட்சியில் இணைந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கொல்கத்தா பெண் மருத்துவர் வழக்கு:

# மரபணு சோதனை சஞ்சய் ராயுடன் ஒத்துப்போவதாகத் தகவல் வெளியீடு





கொல்கத்தா அரச மருத்துவமனையில் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டுக் கொல்லப்பட்ட பெண் மருத்துவரின் உடலிலிருந்து எடுக்கப்பட்ட மாதிரிகள், மரபணு சோதனையில் சஞ்சய் ராயுடன் ஒத்துப்போவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த வழக்கில், சஞ்சய் ராய் என்ற ஒருவர் மட்டுமே குற்றவாளியாக இருக்க முடியும் என விசாரணையில் தெரிய வந்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

மேலும், பெண் மருத்துவர் கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்யப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனவே, சஞ்சய் ராய்க்கு எதிராக குற்றப்பத்திரிகையை மிகத் துல்லியமாகத் தயாரித்து வருவதாக மத்திய புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளன.

மரபணு மற்றும் தடயவியல் சோதனைகள்மூலம், கூட்டுப் பாலியல் வன்கொடுமை இடம்பெறவில்லை என்பதை மத்திய புலனாய்வு அதிகாரிகள் உறுதி செய்திருப்பதாகவும், சஞ்சய் ராய் ஒருவர் மட்டுமே இந்தக் குற்றத்தில் ஈடுபட்டிருப்பதாக உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்த வழக்கு விசாரணையில், இதுவரை வேறு யாருக்கும் தொடர்பிருப்பதற்கான எந்தத் தடயமும் கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 9 ஆம் திகதி மருத்துவமனையில் பெண் மருத்துவர் சடலமாகக் கண்டெடுக்கப்பட்டதற்கு மறுநாள், தன்னார்வலர் சஞ்சய் ராய் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பேரழிவை ஏற்படுத்தும் யாகி சூறாவளி சீன வானிலை நிபுணர்கள் எச்சரிக்கை







இந்த ஆண்டின் மிக சக்தி வாய்ந்த சூறாவளிகளில் ஒன்றான யாகி சூறாவளி சீனாவின் பிரபல சுற்றுலாத்தீவான ஹெய்னனின் கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த நிலையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அங்கிருந்த 4 லட்சம் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என அந்த நாட்டு அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

ரயில்கள், படகுகள், வானூர்திகள் என்பனவற்றின் சேவைகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இது தவிர தென் பிராந்தியத்தை அண்மித்த பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன.

யாகி சூறாவளி இந்த வார ஆரம்பத்தில் வட பிலிப்பைன்சில் பாரிய அழிவை ஏற்படுத்தியதன் பின்னர், அதன் வலு இரட்டிப்பாகி தற்போது மணிக்கு 240 கிலோ மீற்றர் வேகத்தில் வீசி வருகின்றது.

சீனாவின் அதிக மக்கள் தொகையை கொண்ட மாகாணமான ஹெயினன் மற்றும் அண்டை மாகாணமான குவான்டொங் என்பனவற்றிற்கு இந்த சூறாவளி பேரழிவினை ஏற்படுத்தக்கூடும் என வானிலை நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

ஹெய்னனின் நிர்வாக அதிகாரிகள் பாரிய அழிவை ஏற்படுத்தக்கூடிய காற்று வீசும் என தெரிவித்து, நேற்று முன்தினம் முதல் அனைத்து சுற்றுலாத் தலங்களையும் மூடும்படி உத்தரவிட்டுள்ளனர்.

இது தவிர உலகின் மிக நீளமான ஹொங்கொங்கை இணைக்கும் பாலமும் மூடப்பட்டுள்ளது.

பிராந்தியத்தின் சில பகுதிகளில், ஏற்கனவே கடுமையான மழையுடனான வானிலை பதிவாகியுள்ளது. 500 மில்லி மீற்றர் வரை மழை பெய்யும் என வானிலை அதிகாரிகள் எதிர்வு கூறியுள்ளனர்.

# காசாவில் 6 லட்சத்துக்கும் அதிகமான சிறுவர்களுக்கு போலியோ தடுப்பூசி





காசாவின் தெற்கு பகுதியில் இதுவரை ஒரு லட்சத்து 60 ஆயிரத்துக்கும் அதிகமான சிறுவர்களுக்கு போலியோ தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

அத்துடன், காசாவின் மத்திய பகுதியில் 10 வயதிற்குட்பட்ட ஒரு லட்சத்து 87 ஆயிரம் குழந்தைகளுக்கு முதற்கட்டமாக போலியோ தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

இதன் இரண்டாம் கட்டமாக மத்திய பகுதியில் 3 லட்சத்து 40 ஆயிரம் சிறுவர்களுக்குத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.



# வரிசை யுகத்தை உருவாக்கியோர் யார் என்பதை தேர்தலுக்கு முன் வெளிப்படுத்துவாராம் நாமல்!

“2022 ஆம் ஆண்டு அறகலயவுக்குள் இருந்தவரை இடைக்கால ஜனாதிபதியாக்கினோம். வரிசை யுகத்தை உருவாக்கியவர் யார், முடிவுக்குக் கொண்டு வந்தவர் யார் என்பதை செப்டெம்பர் 21 ஆம் திகதிக்கு முன்னர் ஆதாரபூர்வ மாக வெளிப்படுத்துவோம்.”

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

குளியாப்பிட்டிய பகுதியில் இடம்பெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

“2019 ஆம் ஆண்டு பாரிய எதிர்பார்ப்புக்கு மத்தி யில் கோட்டபய ராஜபக்ஷ தலைமையில் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தினார்கள்.

தொடர்ச்சி▼

















# வரிசை யுகத்தை உருவாக்கியோர் யார் என்பதை தேர்தலுக்கு முன் வெளிப்படுத்துவாராம் நாமல்!

தொடர்ச்சி▲

அரசியல் சூழ்ச்சியினால் எமது அரசாங்கம் வீழ்த்தப்பட்டது. பங்களாதேஷ் நாட்டின் நிலைமைதான் 2022 ஆம் ஆண்டு இலங்கையிலும் நிலவியது.

அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதற்காக முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ அவருக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கொல்லுதற்கு ஆணை பிறப்பிக்கவில்லை. எவருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் பதவி விலகினார்.

தேசியத்தையும், நாட்டையும் பாதுகாத்துக் கொள்வதற்காக அறகலயவுக்குள் இருந்தவரை இடைக்கால ஜனாதிபதியாகத் தெரிவு செய்தோம்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சிப் பெறுவதற்கு எடுத்த சிறந்த தீர்மானங்களுக்கு நிபந்தனையற்ற வகையில் ஒத்துழைப்பு வழங்கினோம்.

எமது ஒத்துழைப்புடன் நாட்டுக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போது நாங்கள் அதற்கு இடமளிக்கவில்லை.

தேசியத்துக்காகவே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட தீர்மானித்தேன். எக்காரணிகளுக்காகவும் நாட்டுக்கு எதிராக செயற்பட போவதில்லை."– என்றார்.














# அதிகரித்துச் செல்லும் தேர்தல் முறைப்பாடுகள்

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கடந்த 24 மணித்தியாலங்களில் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு 233 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று இந்தத் தகவலை வெளியிட்டது.

தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ மத்திய நிலையத்திற்கு 84 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையங்களுக்கு 149 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதன்படி, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை 2,460 ஆக அதிகரித்துள்ளது.

தேர்தல் விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 2,387 முறைப்பாடுகளும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 11 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த ஜூலை மாதம் 31ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியிலேயே இந்த முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.




# மியன்மார் முகாமிலிருந்த 20 பேர் நாடு திரும்பினர்

மியன்மாரில், ஆயுதம் தாங்கிய குழுவொன்றின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 20 இலங்கையர்கள் நாட்டை வந்தடைந்தனர்.

மேற்படி 20 இலங்கையர்களும் நேற்று முன்தினம் நாட்டை வந்தடைந்தனர் என தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச அகதிகளுக்கான அமைப்பின் அனுசரணையில் தாய்லாந்தின் பாங்கொக்கில் இருந்து அவர்கள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.





# அரசியல்வாதிகளிடமே இனவாதம் இருக்கிறது

## அநுரகுமார திஸநாயக்க கூறுகின்றார்

இலங்கை நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு சில காலம் எடுக்கும் எனத் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு, அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

“கடந்த காலங்களில் இரு குழுக்களுக்கு இடையிலேயே, ஆட்சி மாற்றங்கள் இடம்பெற்றிருந்தன.

2005 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் வட மாகாணத்திற்கு எதிரான அரசாங்கமே ஸ்தாபிக்கப்பட்டது.

2019ஆம் ஆண்டு முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான அரசாங்கமே ஸ்தாபிக்கப்பட்டது. நாட்டின் ஆட்சியாளர்கள் மக்களை பிளவுபடுத்தியே ஆட்சியைக் கைப்பற்றினர்.

70 வருட காலமாக, நாட்டை நிர்வகித்த ஆட்சியாளர்கள் மக்களை வறுமைக்கு உள்ளாகினர். ஒற்றுமையை சீர்குலைத்தனர். மக்களின் சந்தோசத்தைச் சீர்குலைத்தனர்.

நாட்டின் அரசியல்வாதிகளிடம் கொள்கை ஒன்று இருக்கின்றதா? வவுனியா மாவட்டமானது, சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய மூவின மக்களும் வாழ்கின்றனர்.

மக்களுக்கு இடையே இனவாதம் இல்லை. அரசியல்வாதிகளிடமே இனவாதம் இருக்கின்றது.”– என்றார்.













# தேர்தல் தொடர்பில் சமூக ஊடகங்களில் பொய்ப் பிரசாரங்கள் அதிகரித்துள்ளன

## கஃபே அமைப்பு அறிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலின் போது சமூக ஊடகங்களின் ஊடாக பொய்ப்பிரசாரங்கள் மற்றும் வெறுப்பூட்டக் கூடிய பிரசாரங்கள் அதிகரித்துள்ளண என சுதந்திரமானதும் நீதியானதுமான மக்கள் அமைப்பான கஃபே அமைப்பு தெரிவித்துள்ளது.

அத்துடன், 2019 ஜனாதிபதித் தேர்தலுடன் ஒப்பிடுகையில் இது குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காட்டுகிறது என கஃபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளரான மனாஸ் மக்கின் தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்கு முன்னரான காலப் பகுதிகளில் சமூக ஊடகங்கள் தொடர்பில் கஃபே அமைப்பின் கண்காணிப்பாளர்கள் மேற்கொண்ட கண்காணிப்புகளின்படி, 5 வேட்பாளர்களை இலக்கு வைத்து வெறுப்பூட்டக்கூடிய பிரசாரங்கள், பொய்யான செய்திகள் மற்றும் தவறான தகவல்கள் பகிரப்படுகின்றமை தெரியவந்துள்ளது.

இது சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்குத் தடையாக இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு சமூக ஊடகங்களின் மூலம் பொய்யான மற்றும் வெறுப்பூட்டக்கூடிய பிரசாரங்களால் வன்முறை அதிகரிக்கக்கூடிய வாய்ப்புகள் உருவாகலாம் என கஃபே அமைப்பு எச்சரித்துள்ளது.

அத்துடன் வட்ஸப் குழுமங்களிலும், பேஸ்புக் குழுமங்களிலும் இதுபோன்று பொய்ப்பிரசாரங்கள் மற்றும் வெறுப்பூட்டுகின்ற பிரசாரங்கள் தொடர்பில் பாதகமான காணொளிப் பதிவுகள் பரப்பப்பட்டு வருகின்றன.

அதேபோன்று ஒரே குழுவில் பல்வேறு அரசியல் கருத்துக்களை முன்வைப்பவர்கள் உள்ளதால் இவ்வாறானவர்கள் தங்களுக்கு எதிரான கருத்துக்களை முன்வைப்பதாகவும், இவை வன்முறையாக மாறக்கூடும் எனவும் கஃபே அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இதன் காரணமாகத் தேர்தலுக்கு இடையூறு விளைவிக்கும் இதுபோன்ற பதிவுகள் மற்றும் காணொளிகளை சமூக ஊடகங்கள் மூலம் பகிர்வதைத் தவிர்க்குமாறு சுதந்திரமானதும் நீதியானதுமான மக்கள் அமைப்பான கஃபே தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளரான மனாஸ் மக்கின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



# இரவு வேளைகளில் மழை பெய்யக்கூடும்

நாட்டின் பல பகுதிகளில் வேளைகளில் மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதன்படி மேல், சபரகமுவ மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் இவ்வாறு மழை பெய்யக்கூடும்.

அத்துடன், மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளிலும் மணித்தியாலத்துக்கு 40 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.




# வன்னியில் ரணிலின் பிரசாரம் தொடர்பில் சுசில் பிரேமஜந்த தலைமையில் ஆராய்வு

**(கே.வசந்தன்)**

ஜனாதிபதி வேட்பாளரும், தற்போதைய ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் பிரசாரத்தை முன்னெடுப்பது தொடர்பில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜந்த தலைமையில் கலந்துரையாடல் ஒன்று வவுனியா, ஹொரவப்பொத்தானை வீதியில் உள்ள விருந்தினர் விடுதியில் இன்று நேற்று இடம்பெற்றது.

ஜனாதிபதி தேர்தல் நாடு முழுவதும் சூடு பிடித்துள்ள நிலையில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வெல்ல வைக்க வன்னித் தேர்தல் தொகுதியில் உள்ள வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும், பொறுப்புக்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுடன் இராஜாங்க அமைச்சர்களான கே.கே.மஸ்தான், சுரேன் ராகவன், நாடாளுமன்ற உறுப்பினரான கு. திலீபன் மற்றும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் கட்சிகளின் ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.









# சுமந்திரன் அணியின் தீர்மானம் பாதிக்காது; மக்கள் ஆதரவு பொது வேட்பாளருக்குத்தான்

## விக்னேஸ்வரன் எம்.பி. அதீத நம்பிக்கை

சுமந்திரனைத் தோற்கடித்த சிறிதரன் வெளிநாட்டில் உள்ள நிலையில் சஜித் பிரேமதாஸவுக்கு சுமந்திரன் அணி ஆதரவு அறிவித்தமையை அலட்டிக் கொள்ள தேவையில்லை என தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

சங்குச் சின்னத்தில் போட்டியிடும் தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரனை ஆதரித்து

நேற்று வெள்ளிக்கிழமை யாழ் நகரப்பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பிரச்சார நடவடிக்கையின் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழரசுக் கட்சியின் சிலர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்கப் போகிறார்கள் என அண்மையில் அறிவிப்பு வெளியானது.



தமிழரசு கட்சியின் முக்கிய நபர்கள் கலந்து கொள்ளாமல் சுமந்திரன் அணி சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்து வெளியான அறிவிப்பு தொடர்பில் தமிழ் மக்கள் அலட்டிக் கொள்ளத் தேவை இல்லை.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களிக்க உள்ள நிலையில் சஜித் பிரேமதாஸவுக்கு சுமந்திரன் அணி வாக்களிக்குமாறு கூறியதை தமிழரசு கட்சி கூறியதாக எடுத்துவிட முடியாது.

தமிழ் மக்களை ஆட்சிக்கு மாறி மாறி வந்த எந்த ஒரு சிங்கள அரசாங்கமும் தமிழ் மக்களுக்கு ஏற்ற தீர்வினை வழங்காத நிலையில் இம்முறை ஜனாதிபதி வேட்பாளராக தமிழரை ஒருவரை நிறுத்த வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டோம்.

தமிழ்ஒ பொது வேட்பாளர் தேர்தலில் வெற்றி பெற முடியாது என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். இருந்தாலும் தமிழ் மக்களை ஒன்றிணைக்க கூடிய வேட்பாளராக காணப்படுகிறார்.

ஆகவே தமிழ் மக்களின் எதிர பார்ப்பினை வலியுறுத்தும் தமிழ் பொது வேட்பாளருக்கு தமிழ் மக்கள் தமிழர் களாக சிந்தித்து வாக்களிப்பார்கள் என நம்புகிறேன். – என அவர் மேலும் தெரிவித்தார்.





# தாய்லாந்தின் ஆயுர்வேத சிகிச்சையை இலங்கைக்குக் கொண்டு வரத் திட்டம்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

ஆயுர்வேதம் தொடர்பான தேசிய சபையொன்றை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுத்து வருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற உள்நாட்டு வைத்தியர்களின் மாநாட்டில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“உள்நாட்டு மருத்துவ முறையில் பாரம்பரிய மருத்துவர்களும், ஆயுர்வேத பீடத்தில் பட்டம் பெற்றவர்களும் உள்ளனர். கடந்த காலங்களில், சுதேச மருத்துவம் மிகவும் வெற்றிகரமாகக் காணப்பட்டது.

இந்தச் சுகாதார முறைமைகள் இலங்கையிலும் தெற்காசிய நாடுகள் முழுவதிலும் பல ஆண்டுகள் பரலாகக் காணப்பட்டன.

இப்போது இந்தியா உள்நாட்டு மருத்துவம் குறித்து அதிகளவில் ஆராய்ச்சிகளைச் செய்து வருகிறது.



இலங்கையில் அது நடக்கவில்லை தாய்லாந்து உள்ளிட்ட நாடுகளில் உள்ள பிரபலமான உணவகங்களுக்குச் செல்லும்போது, அங்கு ஆயுர்வேத சிகிச்சையைப் பெறலாம்.

இந்தத் திட்டத்தை நாமும் எதிர்காலத்தில் செயல்படுத்த வேண்டும்.

எனவே, சுற்றுலாத்துறையில் ஆயுர்வேத மருத்துவம் சேர்க்கப்பட வேண்டும். இது அதிக அந்நியச் செலாவணியை ஈட்ட நமக்கு உதவும்.”– என்றார்.









# பாரம்பரிய வைத்தியம் தொடர்பில் தேசிய கொள்கைத் திட்டம் தேவை

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

"பாரம்பரிய வைத்தியம் தொடர்பான தேசிய கொள்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். இந்தக் கொள்கை திட்டம் நாட்டின் சட்டமாக்கப்பட வேண்டும்."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

சுதேச வைத்தியத்துறை தொடர்பில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

"நீண்ட கால வரலாற்றை கொண்ட எமது நாட்டின் சுதேச வைத்தியத்துறையை முறைப்படுத்த வேண்டும். சித்த மருத்துவம், யுனானி, ஆயுர்வேதம் மற்றும் ஹோமியோபதி போன்ற வைத்திய துறைகள் அரச தலையீடுகள் இன்மையால் இன்று முறையற்றுக் காணப்படுகின்றன.

ஆயுர்வேதம் உள்ளிட்ட பாரம்பரிய வைத்தியத்துறைக்கான சட்ட திட்டங்கள் புதுப்பிக்கப்படவில்லை.

எனவே ஐக்கிய மக்கள் சக்தி தற்காலத்திற்கு பொருத்தமான விதத்தில் இந்த சட்ட திட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்ளும்.

மேலும் பாரம்பரிய வைத்தியர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துதல், அனுபவங்களை பகிர்ந்து கொள்ளுதல், சுகாதாரத் துறையை மையமாகக் கொண்டு அந்நிய செலாவணியை ஈட்டுகின்ற வகையிலான சுற்றுலாத் துறை வரைக்கும் இந்த துறையை விருத்தி அடையச் செய்தல், இந்தத் துறையில் உள்ளவர்களுக்கு சமூகத்தில் கௌரவமான இடம் ஒன்றை பெற்றுக் கொடுத்தல், வைத்தியர்களின் சேவைக்கான பெருமதியை சேர்த்தல், போன்ற வேலைத்திட்டங்களோடு நலன்புரி விடயங்களையும் வலுப்படுத்துவோம்."– என்றார்.

















# இன்றைய ராசி பலன்கள் - 07.09.2024

### மேஷம்

இன்றைய நாள் சிறப்பாக இருப்பதைக் காண்பீர்கள். உங்கள் வளர்ச்சிக்கான முக்கிய முடிவுகளை இன்று எடுப்பீர்கள். புதிய மனிதர்களுடனான தொடர்புகள் இன்று ஏற்படும்.

உங்கள் பணியில் வளர்ச்சி ஏற்படுத்துவீர்கள். உங்கள் முயற்சிக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

இன்று உங்கள் துணையிடம் உங்கள் அன்பை ஃ காதலை வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையே நல்லுறவு ஏற்படும்.

உங்களின் கையிருப்பு பணம் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். அதனைக் கொண்டு உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் நம்பிக்கை உணர்வு காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

### ரிஷபம்

நீங்கள் விருந்துகளில் கலந்து கொள்ள நேரலாம். மற்றும் உங்களுக்கு பிரியமானவர்களை உங்கள் வீட்டிடுக்கு அழைக்க நேரலாம். உங்கள் முயற்சியின் மூலம் உங்கள் வாழ்க்கைத் தரம் உயரும்.

நீங்கள் உங்கள் பணிகளை விரைந்து ஆற்றுவீர்கள். என்றாலும் பதட்டத்திற்கு ஆளாவீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பாக இருக்க முயல்வீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று நீங்கள் சிறிய கடன் வாக நேரலாம். மேலும் இழப்பு ஏற்படாமல் இருக்க சிறிது பணத்தை சேமியுங்கள்.தாயின் உடல் நலத்துக்காகச் செலவு செய்வீர்கள். பெரிய அளவில் பாதிப்பு இருக்காது எனவே கவலை வேண்டாம்.

### மிதுனம்

நீங்கள் செயல்களை முன்னுரிமைப்படி ஆற்ற வேண்டும். உங்கள் இலக்குகளில் வெற்றி அடைய நீங்கள் இன்னும் முயல வேண்டும்.

இன்று நல்ல பலன்களைக் காண நீங்கள் சிறப்பாக செயல்பட வேண்டும். இதன் மூலம் நீங்கள் அதிகப்படியான பணிகளை சமாளிக்க முடியும்.

உங்கள் உணர்ச்சிப் பூர்வமான மனநிலையை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். உங்கள் வீட்டை புனரமைப்பதற்கு பணத்தை பயன்படுத்துவீர்கள். பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.இன்று தோல் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படலாம். எண்ணெய் பதார்த்தங்கள் உண்பதை தவிர்க்கவும்.

### கடகம்

இன்று அதிகப்படியான செயல்கள் காணப்படும். அவைகளை முன்னுரிமைப்படி ஆற்ற வேண்டும்.

நீங்கள் தொழில் சார்ந்த அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும். உங்கள் மேலதிகாரிகள் உங்கள் பணியைப் பாராட்டுவார்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் சகஜமாக நடந்து கொள்ள வேண்டும். இருவரும் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

இன்று அதிக பணம் சம்பாதிப்பீர்கள். உங்கள் வங்கியிருப்பு உயரக் காண்பீர்கள். இன்று புதிய முதலீட்டுக்குத் திட்டமிடுவீர்கள்.உற்சாகம் காரணமாக இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

### சிம்மம்

மனதில் உள்ள குழப்பம் காரணமாக உங்கள் தொடர்பாடலில் பிரச்சினை காணப்படும். நீங்கள் எடுக்கும் முடிவுகளில் கவனம் தேவை.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. அதன் காரணமாக பதட்டம் ஏற்படும். உங்கள் வளர்ச்சி பாதிக்கப்படும்.

உங்கள் நேர்மை மற்றும் உண்மை காரணமாக உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படும்.இதனால் உறவில் நல்லிணக்கமும் மகிழ்ச்சியும் காணப்படும்.

தேவையற்ற சில விஷயங்களுக்கு பணம் செலவு செய்ய நேரும். அதனால் இன்று சிறிய அளவிலான கடன் வாங்குவீர்கள்.

பதற்றம் மற்றும் ஓய்வின்மை காரணமாக இன்று களைப்பாக உணர்வீர்கள்.

### கன்னி

இன்று நீங்கள் உங்களை மகிழ்ச்சியாக வைத்திருக்க வேண்டும். எந்தச் செயலிலும் உணர்ச்சிவசப்படாதீர்கள். இசை கேட்பதன் மூலம் மன ஆறுதல் பெறலாம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை திறம்பட ஆற்றுவதற்கு நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சூடான விவாதம் நடக்க வாய்ப்புள்ளது. எனவே அமைதியாக இருப்பது சிறந்தது.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். அனாவசியமாக பணம் செலவாகாமல் காத்துக் கொள்ளுங்கள்.

அதிக உடல் உழைப்பு காரணமாக தலைவலி ஏற்படலாம். காயம் ஏற்படாமல் இருக்க வாகனம் ஓட்டும்போது கவனமாக இருக்க வேண்டும்.

### துலாம்

இன்று உங்கள் செயல்களுக்கு தக்க பலன்கள் கிடைக்காது. இது உங்களுக்கு சிறிது ஏமாற்றத்தை அளிக்கும். பொறுமையும் நேர்மறை அணுகுமுறையும் அவசியம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும் இன்று தவறுகள் செய்ய வாய்ப்புள்ளதால் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள். ஆரோக்கியமான உறவை பராமரிக்க இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். கூடுதல் செலவுகள் செய்ய நேரும். செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினையால் பாதிக்கப்படுவீர்கள். ஆரோக்கியமாய் இருப்பதற்கு எண்ணெய் மற்றும் கார உணவு வகைகளை தவிர்க்கவும்.

### விருச்சிகம்

இன்று உங்களுக்கு சிறிது அதிர்ஷ்டம் காணப்படும். உங்கள் தந்தையின் ஆதரவு உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். ஆன்மீக யாத்திரை உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் பணிகளை விரைந்து முடிக்க நீங்கள் புத்திசாலித்தனத்துடன் செயல் பட வேண்டும். உங்கள் திறமையும் நேர்மையும் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் நட்பான முறையில் அணுகுவது சிறந்தது. இதனால் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். உங்கள் சேமிப்பு கணிசமாக உயரும். பணத்தை பயனுள்ள வகையில் பயன்படுத்துவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 07.09.2024




இன்று சிறிது தடைகளுக்குப் பின் வெற்றியைக் காண்பீர்கள். என்றாலும் சிறப்பாக திட்டமிடுவதன் மூலம் மட்டுமே இன்று நீங்கள் எதிர்பார்க்கும் வெற்றியைக் காண முடியும்.

கடின உழைப்பு மூலம் நீங்கள் இன்று வெற்றி பெற இயலும். உங்கள் பணிகளை விரைவில் முடிக்க நீங்கள் திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து நட்பாக பழகுவதன் மூலம் சிறந்த புரிந்துணர்வு ஏற்படுத்தலாம். இதன் மூலம் நல்லுறவும் உறவில் திருப்தியும் ஏற்படும்.

இன்று பண வரவு செலவு இரண்டும் காணப்படும். எதிர்பாராத வகையில் பண வரவு காணப்படும்.

முறையாக ஓய்வெடுப்பதன் மூலம் நீங்கள் புத்துணர்ச்சியுடனும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள். கால் மற்றும் தொடைகளில் வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது. யோகா மேற்கொள்வது பயனுள்ளதாக இருக்கும்.




முறையான முயற்சி உங்கள் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற உதவும். பலன்கள் உங்களுக்கு சாதகமாக இல்லாவிட்டாலும் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும். நண்பர்களின் தொடர்பு உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

உங்கள் பணிகளை முடிக்க நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். ஆனால் நீங்கள் பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது உங்கள் பணிகளை ஆற்றும் பொழுது கவனம் தேவை.

உறவில் சிறிது அனுசரித்துப் போவது சிறந்த பலனைத் தரும். உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிக்க இது உதவும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக இருக்கும்.




இன்று சவால்கள் நிறைந்து காணப்படும். பொறுமையாக இருக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

உங்கள் தவறுகளை அடுத்தவர் சுட்டிக் காட்டாமல் இருக்க பணிகளை ஆற்றும் பொழுது கவனம் தேவை.

குடும்ப பிரச்சினைகள் காரணமாக உறவில் குழப்பம் ஏற்படலாம். இதனால் உங்கள் துணையுடனான உறவில் நல்லிணக்கம் குறைந்து காணப்படும்.

இன்று பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். பயணத்தின் போது பண இழப்பு நேரலாம்.

ஒவ்வாமை காரணமாக சளி ஏற்படலாம். இதனால் உங்கள் ஆரோக்கியம் பாதிக்கப்படும்.




உங்கள் திறமைகளை வெளிப்படுத்த இது உகந்த நாள். பழைய நண்பர்களை சந்திப்பது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். ஆன்மீக ஈடுபாடு ஆறுதலை அளிக்கும்.

நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். பணியில் சாதிக்க வேண்டும் என்ற விருப்பம் இருக்கும்.

நம்பிக்கையான எண்ணங்கள் மற்றும் செயல்கள் மூலம் இன்றைய நாளை நீங்கள் உற்சாகமாக்கிக் கொள்ளலாம். இந்த உணர்ச்சி உறவின் சுணக்கங்களை நீக்கி விடும்.

பங்கு வர்த்தகம் மூலம் பணம் சேர்க்கும் வாய்ப்பு உள்ளது. அதன் மூலம் வரும் பணத்தை சேமிப்பீர்கள்.

வயிறு உபபுசம் காரணமாக இன்று அசௌகரியமாக உணர்வீர்கள். உணவில் கவனம் தேவை.




